# NEWSLETTER

**JANUARY 2024**


## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


VIVEKANANDA COMMUNITY FOUNDATION

## தலைமைத்துவப் பயிற்சியின் இரண்டாம் செயலமர்வு



எதிர்கால சமூகத்தை வலுவூட்டும் தலைவர்களை உருவாக்கும் நோக்கில் தலைமைத்துவப் பயிற்சியானது தொடர்ச்சியான ஒரு திட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. இதனடிப்படையில் இதற்கான அடித்தளத்தினை எம்மவரிடமிருந்தே ஆரம்பிக்கும் முகமாக 20 பேர் தெரிவு செய்யப்பட்டு தலைமைத்துவ பயிற்சியின் இரண்டாம் கட்டமானது 2024.01.02 அன்று இடம்பெற்றது.
எமது நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர் உள்ளிட்ட எமது அறக்கட்டளையின் சேவையாளர்கள், விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் சேவையாளர்கள், அமிர்தா நிறுவனத்தின் சேவையாளர்கள் மற்றும் வாழ்வியலும் வழிகாட்டலும் பயிற்சியின் மாணவர்களும் இன்றைய தினம் பயிற்சியில் கலந்து கொண்டனர்.
மிகவும் பயனுள்ள முறையில் விளையாட்டுகள் மற்றும் பயனுள்ள செயற்பாடுகளூடாக இப்பயிற்சியானது வளவாளர் திரு.க.அருள்நிதி அவர்கள் மற்றும் திருமதி.ரேகா அருள்நிதி ஆகியோரால் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டது.

## ஆங்கில வகுப்புகளுக்கான ஆரம்பநிகழ்வு



மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் கடந்த வருடம் நாம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தோம்.
அதனடிப்படையில் கடந்த வருடம் வந்தாறுமூலை கண்ணகி வித்தியாலய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புகள் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அம்மாணவர்களுக்கான அடிப்படை ஆங்கில அறிவினைப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்திற்கிணங்க அதற்கான ஆரம்பகட்ட நிகழ்வு இன்றைய தினம் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர், மாணவர்கள் மற்றும் எமது அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் மற்றும் சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பொறுப்பெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாகப் பொறுப்பெடுக்கப்பட்டு மாதாந்தம் உதவித்தொகை பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியானது 2024.01.06 அன்றைய தினம் இடம்பெற்றது. எமது அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர் உள்ளிட்ட சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டதோடு சிறப்பான முறையில் பல்வேறு செயற்பாடுகளூடாகத் தலைமைத்துவப் பண்புகளும், நேரமுகாமைத்துவம் போன்ற விடயங்களும், விளையாட்டுகளும் உள்ளடங்கலாகத் தலைமைத்துவப்பயிற்சியானது மாணவர்களுக்கு பொருத்தமான முறையில் எமது திட்டமுகாமையாளரினால் செவ்வனே நடாத்தப்பட்டது



# Top news

## பசுமைப்புரட்சித் திட்டத்தின் ஆரம்பம்





### அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜனன தினத்தினை முன்னிட்டு

இயற்கை அன்னைக்கான எமது பங்களிப்பினை வழங்கும் முகமாக பூமியைக் குளிர்விப்பதற்காக பசுமைப்புரட்சி எனும் தொனிப்பொருளில் மரக்கன்றுகளை வழங்குதல் மற்றும் நடுதல் என்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக குறைந்தது 500 மரக்கன்றுகளையாவது நடுதல் அல்லது வழங்குதல் மூலம் இந்த ஆண்டிற்கான செயற்பாடாக முன்னெடுக்க வேண்டுமென்ற திட்டத்திற்கிணங்க அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜனன தினத்தினை முன்னிட்டு இன்றைய தினம் எமது புதிய திட்டமானது அமுல்படுத்தப்பட்டது.



- மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்
- திருப்பழுகாமம் திலகவதியார் மகளிர் இல்லம்
- முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்

### பிரதேச செயலகத்தினருடன் ஓர் சந்திப்பு

ஆரையம்பதி மற்றும் பட்டிப்பளைப் பிரதேச செயலகங்களில் இடமாற்றம் பெற்று வருகை தந்த புதிய பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடல் 2024.01.08 அன்று இடம்பெற்றது. ஆரையம்பதி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிறுவர் பிரிவிற்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு அவர்களுடனான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டதோடு எமது நாட்காட்டிகளும் வழங்கி வைக்கப்பட்டது.





எமது பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான வெள்ள நிவாரணப்பொதி உலர் உணவுப்பொருட்கள் மற்றும் எமது நாட்காட்டிகளும் 2024.01.08 அன்று வழங்கப்பட்டது.



## சுவாமி விவேகானந்தரின் ஜனன தினத்தினை முன்னிட்டு



- எமது விவேகானந்த தொழிநுட்பக் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் ஜனன தினமானது சிறப்பான முறையில் அனுசரிக்கப்பட்டு பூஜைகளும் நடாத்தப்பட்டதோடு எமது விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டது.

- மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க மூன்று மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் எமது தொழில்நுட்பவியல் கல்லூரியில் வழங்கி வைக்கப்பட்டது.
- ‘உதிரம் கொடுப்போம்' உயிரைக் காப்போம்’ எனும் தொனிப் பொருளில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வானது எமது கல்லூரியால் சிறப்பாக நடாத்தப்பட்டதோடு இந்நிகழ்வில் பங்கேற்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது சமுதாய அறக்கட்டளையின் பசுமைப்புரட்சி திட்டத்தினூடாக மரக்கன்றுகளை வழங்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

## விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினரின் உறவுகளுக்கான வெள்ள நிவாரணப் பொதிகள்



தொடர்ச்சியான கனமழை காரணமாக முற்று முழுதாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தைத்திருநாளை முன்னிட்டு பொங்கல் பொதி வழங்கும் நிகழ்வானது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினால் முன்னெடுக்கப்பட்டது.

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கரடியனாறு பிரதேசத்திலிருந்து பொறுப்பெடுக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அடிப்படைக் கணனி பயிலும் கித்துள் பிரதேச மாணவர்கள் உள்ளடங்கலாக 21 குடும்பங்களுக்கான பொங்கல் பொதியானது வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து செங்கலடி பிரதேசத்தில் எம்மால் பொறுப்பெடுக்கப்பட்டு உதவித்தொகை பெறும் 7 மாணவர்களின் குடும்பங்களுக்கான பொதி வழங்கும் நிகழ்வு கொம்மாதுறை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம் பெற்றது. அதன் அடுத்த கட்டமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பொறுப்பெடுக்கப்பட்ட 14 மாணவர்களின் குடும்பங்களுக்கான பொதியானது வழங்கப்பட்டதோடு, கிரான்குளம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 10 வறிய குடும்பங்களுக்கும் பொதியும் நிவாரணமும் வழங்கப்பட்டது. அவ்வாறே முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திலும் 35 வறிய குடும்பங்களுக்கான பொதி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு மொத்தமாக 87 குடும்பங்களுக்கான பொங்கல் பொதி மற்றும் நிவாரணமும் வழங்கப்பட்டது.

## அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் பொங்கல் விழா



அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் வெகு விமரிசையாக பொங்கல் விழா 2024.01.15 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் முகாமையாளர் உள்ளிட்ட அனைத்து சேவையாளர்களும், சாரதா நிலைய மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டதோடு அவர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டது.

## இன மத பேதம் கடந்த பொங்கல் விழா

எமது விவேகானந்த குடும்பத்தினரால் இன, மத, பேதங்களின்றி அனைத்து மாணவர்கள் மற்றும் சேவையாளர்களின் ஒத்துழைப்புடன் உழவர் திருநாள் 2024.01.19 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.



விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா நிறுவனம், சமூக நலன்புரி அமைப்பு உள்ளிட்ட அனைத்து சேவையாளர்களும் இந்நிகழ்வில் பங்கு பற்றியதோடு மட்டுமல்லாமல் முட்டி உடைத்தல், கயிறிழுத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகளும் நடாத்தப்பட்டது.









## சிலம்பம் பயிற்சி வகுப்புக்கள்

முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் கல்வி பயிலும் மாணவிகள் கராத்தே, யோகா போன்ற பல்வேறு கலைகளிலும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கும் அதே வேளை கடந்த வருடம் 18 மாணவிகள் வடமாகாண கராத்தே போட்டியில் பங்குபற்றி 16 பதக்கங்களையும் பெற்றுக் கொண்டதோடு சிலம்பம் கற்று வருகின்றனர்



## ஏம் அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஓர் திட்டமாக எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் நோக்கத்தில் தலைமைத்துவப் பயிற்சியானது தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ் வருடத்திற்கான இரண்டாவது செயலமர்வு 2024.01.26 அன்று கொம்மாதுறை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது.

எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் பயிற்சியை நடாத்தப்பட்டதோடு தெரிவு செய்யப்பட்ட சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். சுய ஏற்பு, தொழில் இலக்கு போன்ற தொனிப்பொருளில் செயலமர்வு நடாத்தப்பட்டதோடு பயிற்சிகளூடான தெளிவூட்டலும் எமது பணிப்பாளரால் வழங்கப்பட்டது.











## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இவ்வாண்டிற்குரிய முதலாவது கலந்துரையாடல் 2024.01.30 அன்று இடம்பெற்றது. எமது 5 பாலர் பாடசாலைகளிலும் கற்பிக்கும் 10 ஆசிரியர்களும் கலந்துகொண்டதோடு சென்ற ஆண்டிற்கான ஆவணங்களின் சமர்ப்பித்தலைத் தொடர்ந்து எதிர்வரும் காலப்பகுதிகளில் அவர்களுடனான எமது செயற்றிட்டங்கள் பற்றியும் அவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது . அவர்களது பாலர் பாடசாலைக்கான விளையாட்டுப்பொருட்களும் வழங்கப்பட்டது.

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் தை மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்







